


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் எம்.பி. அவர்கள் முன்னிலையில், சுகாதாரத்தை பராமரிக்க, 56 மீன் விற்பனையாளருக்கு சாதனங்களை நாகர்கோவில், வடசேரி மீன்சந்தையில் இன்று (26.10.2016) வழங்கினார். தமிழ்நாடு மாநில தலைமை மீன்வளக் கூட்டுறவுத் தலைவர் திரு. எம். சேவியர் மனோகரன் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 762/ 2016 நாள்: 26.10.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் எம்.பி. அவர்கள் முன்னிலையில், மீன் சந்தை வளாகத்தினை தூய்மையாக கையாள்வது குறித்து, விழிப்புணர்வு முகாம் இன்று (26.10.2016) நடைபெற்றது.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் எம்.பி. அவர்கள் முன்னிலையில், மத்திய அரசின் 'Swachhta pakhwada Scheme' திட்டத்தின் கீழ், மீன் சந்தை வளாகத்தினை தூய்மையாக கையாள்வது குறித்து, விழிப்புணர்வு முகாம் நாகர்கோவில் வடசேரி மீன்சந்தையில் இன்று (26.10.2016) நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையேற்று தெரிவித்ததாவது:-

தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் (NFDB) ஐதராபாத், நிதியுதவியுடன் நாகர்கோவில், வடசேரியில் நவீனமயமாக்கப்பட்ட மீன் சந்தையானது கட்டிப்பட்டது. அதன் மொத்த திட்ட மதிப்பீடு ரூ.94.50 இலட்சத்தில் தேசிய மீன்வள மேம்பாட்டு வாரியம் 90 சதவீத நிதியுதவியாக ரூ.85.05 இலட்சம் மற்றும் நாகர்கோவில் நகராட்சியின் 10 சதவீதம் பங்களிப்பு தொகையாக ரூ.9.45 இலட்சம் நிதியுதவியுடன் கட்டி முடிக்கப்பட்டது. மத்திய அரசின் (தூய்மை இந்தியா) 'Swachhta pakhwada Scheme' திட்டத்தின் கீழ், இந்த விழிப்புணர்வு முகாம் இன்று நடத்தப்பட்டு, மீன்களை சுகாதாரமான முறையில் கையாள்வது குறித்தும், மீன் சந்தை வளாகத்தை தூய்மையான முறையில் பராமரிப்பது குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது என தெரிவித்தார்.

பின்னர் வடசேரி மீன்சந்தையில் உள்ள 56 கடைகளில் மீன்களை சுத்தமாகவும், சுகாதாரமாக பராமரித்த திரு. பொன்னையா என்பவருக்கு பாராட்டுச்சான்றிதழ்கள் மற்றும் மீன்களை வைத்துக்கொள்வதற்காக குளிர்சாதன பெட்டிகளும், கை உறை மற்றும் மீன்கழிவுகளை அள்ளுவதற்கு சாதனங்களையும் வழங்கினார்.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில தலைமை மீன்வளக் கூட்டுறவுத் தலைவர் திரு. எம். சேவியர் மனோகரன், மீன்துறை துணை இயக்குநர் திரு. வே. லாமேக் ஜெயக்குமார், உதவி இயக்குநர்கள் திரு. சி. ரூபர்ட் ஜோதி, திருமதி. வி. தீபா, மீன்வள பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் எஸ்.டேவிட் கிங்ஸ்டன், நகராட்சி ஆணையாளர் (பொ) திரு.டி.சுரேஷ்குமார் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.